www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுத் தேர்வு - 2022

பதிவு எண்

## XI - மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. **(14x1=14)**

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. நன்னூலை இயற்றியவர் ________
   அ) பவணந்தி முனிவர் ஆ) தொல்காப்பியர்
   இ) சு. வில்வரத்தினம் ஈ) தண்டி
2. நேரடி மொழி என்பது ________
   அ) கவிதை மொழி ஆ) உடல் மொழி
   இ) பேச்சு மொழி ஈ) வேற்றுமொழி
3. தமிழகத்தின் மாநில மரம் எது?
   அ) தென்னை மரம் ஆ) வாழை மரம்
   இ) ஆல மரம் ஈ) பனை மரம்
4. காற்றில் ஆடும் புல்வீடு என அழகிய பெரியவன் கூறுவது ________
   அ) சிட்டுக்குருவிக் கூடு ஆ) மைனா குருவிக்கூடு
   இ) தூக்கணாங்குருவிக் கூடு ஈ) உள்ளான் கூடு
5. காவடிச் சிந்தின் தந்தை என அழைக்கப்படுபவர் ________
   அ) அண்ணாமலையார் ஆ) பெரியவன் கவிராயர்
   இ) பாரதியார் ஈ) போதனார்
6. சேயோன் மேய மைவரை உலகம் என்று கூறும் நூல் ________
   அ) நன்னூல் ஆ) திருமுருகாற்றுப்படை
   இ) புறநானூறு ஈ) தொல்காப்பியம்
7. ஒப்புரவு என்பதன் பொருள் ________
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
   இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
8. பட்டினிக்குரத்தி என்பவர் ________
   அ) பௌத்தப் பெண் ஆ) சமணப் பெண்
   இ) சைவப் பெண் ஈ) வைணவப் பெண்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

9. கூற்று 1: நற்றிணை 400 பாடல்களைக் கொண்டது
கூற்று 2: நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்
அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று ஒன்று தவறு
இ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று இரண்டு தவறு

10. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 3 ஆ) 9 இ) 27 ஈ) 13

11. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்
அ) 22 ஆ) 24 இ) 18 ஈ) 10

12. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம், விகுதி
ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
இ) பகுதி, விகுதி
ஈ) பகுதி, சந்தி, விகாரம்

13. கருத்துப் படங்களை மட்டுமே கொண்டு பாரதி நடத்திய இதழ் ________
அ) சுதேசமித்திரன் ஆ) இந்தியா
இ) சித்திராவளி ஈ) வண்ணச் சித்திரம்

14. இலங்கை அரசின் சாகித்தியப் பரிசு பெற்றவர் ________
அ) ஜெயமோகன் ஆ) அ. முத்துலிங்கம்
இ) சி.சு. செல்லப்பா ஈ) பிரபஞ்சன்

## பகுதி - II

### பிரிவு - 1

*எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.* ***(3x2=6)***

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. ஏதிலியாக் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
17. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
18. கொழுஞ்சோறு - புணர்ச்சி விதி தருக.

### பிரிவு - 2

*எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.* ***(2x2=4)***

19. சங்க காலத்தில் தமிழ் மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
20. ஆனந்த ரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
21. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

### பிரிவு - 3

*எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.* ***(7x2=14)***

22. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்.

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
குரை, குறை (அல்லது) பொரி, பொறி

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

கால்நடை (அல்லது) பலகை

26. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

சந்தோஷம், சரித்திரம்

27. இலக்கணக் குறிப்பு எழுதுக.

செங்கயல், நனிஇகக்கும்

28. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

ஈன்ற (அல்லது) துஞ்சல்

29. புணர்ச்சி விதி எழுதுக.

புகழெனின் (அல்லது) சிறுகோல்

30. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

## பகுதி - III

ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.

### பிரிவு - 1

*எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.* ***(2x4=8)***

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32. 'தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து' என்பதை விளக்குக.

33. *"ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி*
*அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்தனள் கொல்"*

-இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

34. "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" - யாது?

### பிரிவு - 2

*எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.* ***(2x4=8)***

35. 'சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும்' - குறிப்பு வரைக.

36. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை சான்றுடன் விவரிக்க.

37. வேதிகலப்பில்லாத பூச்சிக் கொல்லி நடை முறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

### பிரிவு - 3

*எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.* ***(3x4=12)***

38. *பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு.* -இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

(அல்லது)

உவமை அணியை சான்றுடன் விளக்குக.

39. பொருண்மொழிக் காஞ்சித் துறை (அல்லது)
பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

40. இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

- கவிமணி

41. தமிழாக்கம் தருக.


அ) Time is gold

ஆ) Union is strength

இ) No pain No gain

ஈ) Art is long and life is short

42. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக மாற்றுக.




## பகுதி - IV

*அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.* ***(3x6=18)***

43. அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக. **(அல்லது)**

ஆ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளை தொகுத்துரைக்க.

44. அ) 'இயற்கை வேளாண்மையே இன்றைய தேவையே' இக்கூற்றை நும் பாடப்பகுதி கொண்டு ஆராய்க.

**(அல்லது)**

ஆ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறைகளில் ஏற்பட்ட மாற்றத்தை விவரிக்க.

45. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

**(அல்லது)**

ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

## பகுதி - V

*குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.* ***(4+2=6)***

46. அ) *"ஏடு தொடக்கி".....*" எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.

ஆ) *'பட்டு'* - என முடியும் குறளை எழுதுக.

இப்படிக்கு
S. Hemanathan B.Sc
JETWAY TUTION CENTER.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593